தினமணி

**விவசாயக் கருவிகளை வாடகைக்கு விடும் திட்டம்: விரிவுபடுத்த முதல்வர் உத்தரவு**

First Published : 07 Oct 2010 03:15:01 AM IST

சென்னை, அக். 6: விவசாயக் கருவிகளை வாடகைக்கு விடும் திட்டத்தை மேலும் 2 ஆயிரம் தொடக்க வேளாண் வங்கிகளுக்கு விரிவுபடுத்த முதல்வர் கருணாநிதி உத்தரவிட்டுள்ளார். கூட்டுறவு, உணவுத் துறை திட்டப் பணிகளின் முன்னேற்றம் குறித்து தலைமைச் செயலகத்தில் முதல்வர் கருணாநிதி செவ்வாய்க்கிழமை ஆய்வு செய்தார். இதுகுறித்து, தமிழக அரசு வெளியிட்ட தகவல்:

விவசாயிகளுக்குப் பயிர்க்கடன்கள் வழங்குவதிலும், நலிவடைந்த கூட்டுறவு சங்கங்களை உயிர்ப்பித்து லாபகரமாக இயங்கச் செய்வதிலும் கூட்டுறவுத் துறை ஆற்றிய பணிகளை முதல்வர் கருணாநிதி பாராட்டினார்.

மத்திய கூட்டுறவு வங்கிக் கிளைகள், நகர்ப்புற கூட்டுறவு வங்கி கிளைகள் மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்களை கம்ப்யூட்டர் மயமாக்கும்

பணிகளை விரைந்து முடிக்க உத்தரவிட்டார்.

நியாயவிலைக் கடைகளில் வழங்கப்படும் அரிசி முதலான அத்தியாவசியப் பொருள்களின் தரம் சரியாக உள்ளதா என்பதை அவ்வப்போது ஆய்வு செய்திட வேண்டும் என்றும் அறிவுறுத்தினார். நியாயவிலைக் கடைகளில் பணியாளர்கள் பணிசெய்யும் நிலைமைகள் குறித்து அதிகாரிகள் அடிக்கடி பார்வையிட்டு கண்காணிப்பதுடன், மக்களுக்கு சரியான எடையில் பொருட்கள் வழங்கப்படுவதை உறுதிப்படுத்த வேண்டும் என்றார் முதல்வர்.

பண்டிகைக் காலம் நெருங்குவதால், அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்படுவதில் எந்தவிதத்திலும் சுணக்கம் ஏற்படாத வகையில் அவற்றின் இருப்புகளைக் கண்காணிக்க வேண்டும் என்று உத்தரவிட்டார் அவர்.

விவசாயக் கூட்டுப் பொறுப்புக் குழுக்கள் சிறப்பாகச் செயல்பட்டு விவசாயிகள் பயனடைந்து வருகின்றனர். இந்த ஆண்டில் அனுமதிக்கப்பட்டுள்ள 10 ஆயிரம் விவசாயக் கூட்டுப் பொறுப்புக் குழுக்களுடன் ஏற்கெனவே அமைக்கப்பட்ட குழுக்களையும் தொடர்ந்து கண்காணிக்க வேண்டும் என்று முதல்வர் கருணாநிதி உத்தரவிட்டார். விவசாய வேலைகளுக்குத் தேவையான தொழிலாளர்கள் கிடைப்பது கடினமாக இருப்பதால், இப்போது 224 தொடக்க வேளாண்மை வங்கிகளில் நவீன விவசாயக் கருவிகள் வாங்கப்பட்டு அவை வாடகைக்கக்கு விடப்பட்டு வருகின்றன.

இந்தத் திட்டத்தை மேலும் 2 ஆயிரம் வங்கிகளுக்கு விரிவுபடுத்திட முதல்வர் உத்தரவிட்டுள்ளார் என்று அரசின் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**விவசாயக் கருவிகளை வாடகைக்கு விடும் திட்டம்: விரிவுபடுத்த முதல்வர் உத்தரவு**

First Published : 07 Oct 2010 03:15:01 AM IST

சென்னை, அக். 6: விவசாயக் கருவிகளை வாடகைக்கு விடும் திட்டத்தை மேலும் 2 ஆயிரம் தொடக்க வேளாண் வங்கிகளுக்கு விரிவுபடுத்த முதல்வர் கருணாநிதி உத்தரவிட்டுள்ளார். கூட்டுறவு, உணவுத் துறை திட்டப் பணிகளின் முன்னேற்றம் குறித்து தலைமைச் செயலகத்தில் முதல்வர் கருணாநிதி செவ்வாய்க்கிழமை ஆய்வு செய்தார். இதுகுறித்து, தமிழக அரசு வெளியிட்ட தகவல்:

விவசாயிகளுக்குப் பயிர்க்கடன்கள் வழங்குவதிலும், நலிவடைந்த கூட்டுறவு சங்கங்களை உயிர்ப்பித்து லாபகரமாக இயங்கச் செய்வதிலும் கூட்டுறவுத் துறை ஆற்றிய பணிகளை முதல்வர் கருணாநிதி பாராட்டினார்.

மத்திய கூட்டுறவு வங்கிக் கிளைகள், நகர்ப்புற கூட்டுறவு வங்கி கிளைகள் மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்களை கம்ப்யூட்டர் மயமாக்கும்

பணிகளை விரைந்து முடிக்க உத்தரவிட்டார்.

நியாயவிலைக் கடைகளில் வழங்கப்படும் அரிசி முதலான அத்தியாவசியப் பொருள்களின் தரம் சரியாக உள்ளதா என்பதை அவ்வப்போது ஆய்வு செய்திட வேண்டும் என்றும் அறிவுறுத்தினார். நியாயவிலைக் கடைகளில் பணியாளர்கள் பணிசெய்யும் நிலைமைகள் குறித்து அதிகாரிகள் அடிக்கடி பார்வையிட்டு கண்காணிப்பதுடன், மக்களுக்கு சரியான எடையில் பொருட்கள் வழங்கப்படுவதை உறுதிப்படுத்த வேண்டும் என்றார் முதல்வர்.

பண்டிகைக் காலம் நெருங்குவதால், அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்படுவதில் எந்தவிதத்திலும் சுணக்கம் ஏற்படாத வகையில் அவற்றின் இருப்புகளைக் கண்காணிக்க வேண்டும் என்று உத்தரவிட்டார் அவர்.

விவசாயக் கூட்டுப் பொறுப்புக் குழுக்கள் சிறப்பாகச் செயல்பட்டு விவசாயிகள் பயனடைந்து வருகின்றனர். இந்த ஆண்டில் அனுமதிக்கப்பட்டுள்ள 10 ஆயிரம் விவசாயக் கூட்டுப் பொறுப்புக் குழுக்களுடன் ஏற்கெனவே அமைக்கப்பட்ட குழுக்களையும் தொடர்ந்து கண்காணிக்க வேண்டும் என்று முதல்வர் கருணாநிதி உத்தரவிட்டார். விவசாய வேலைகளுக்குத் தேவையான தொழிலாளர்கள் கிடைப்பது கடினமாக இருப்பதால், இப்போது 224 தொடக்க வேளாண்மை வங்கிகளில் நவீன விவசாயக் கருவிகள் வாங்கப்பட்டு அவை வாடகைக்கு விடப்பட்டு வருகின்றன.

இந்தத் திட்டத்தை மேலும் 2 ஆயிரம் வங்கிகளுக்கு விரிவுபடுத்திட முதல்வர் உத்தரவிட்டுள்ளார் என்று அரசின் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**கனமழை பாதிப்புக்கு பயிர் காப்பீடே பாதுகாப்பு: வேளாண் இணை இயக்குநர் சி. இளங்கோவன்**
First Published : 07 Oct 2010 12:00:00 AM IST

கடலூர்: அக்டோபர் முதல் டிசம்பர் வரை கனமழை பெய்யும் ஆபத்து இருப்பதால் சம்பா பயிர்களுக்கு காப்பீடு செய்து கொள்ளுமாறு, விவசாயிகளுக்கு கடலூர் மாவட்ட வேளாண் இணை இயக்குநர் சி. இளங்கோவன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

÷அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

÷கடலூர் மாவட்டத்தில் தற்போது சம்பா நெல் நடவுப் பணிகள் முழுவீச்சில் நடந்து வருகின்றன. நடப்பு ஆண்டில் இந்த மாவட்டத்தில் 97 ஆயிரம் ஹெக்டேரில் சம்பா நெல் சாகுபடி செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதுவரை 30 ஆயிரம் ஏக்கரில் நடவுப் பணிகள் முடிந்து உள்ளன.

÷சம்பா, தாளடி பருவங்களில் நெல் அதிக அளவில் சாகுபடி செய்யப்படுகிறது. இப்பருவத்தில் அதிக அளவில் மழை பெய்யவும் வாய்ப்பு உள்ளது. அக்டோபர் முதல் டிசம்பர் வரை பெய்யும் கன மழையால் வெள்ளம் ஏற்பட்டு விவசாயிகளுக்கு மகசூல் இழப்பு ஏற்படுகிறது.

÷வெள்ளம், வறட்சி, பூச்சி, நோய்த்தாக்குதல் போன்ற இயற்கை இடர்பாடுகளால் ஏற்படும் மகசூல் இழப்புகளில் இருந்து தங்களைக் காத்துக் கொள்ள, விவசாயிகள் பயிர்க் காப்பீடு செய்து கொள்வது அவசியம். இதற்கென வேளாண் காப்பீட்டுத் திட்டத்தை, தேசிய வேளாண் காப்பீட்டு நிறுவனம் செயல்படுத்தி வருகிறது.

÷இத்திட்டத்தில் விவசாயிகள் பதிவு செய்துகொள்ள, தேவையான காப்பீட்டுப் பிரீமியத் தொகையை, உரிய படிவத்துடன் கூட்டுறவு வங்கியிலோ, தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளிலோ செலுத்த வேண்டும். கடன் பெறும் விவசாயிகளுக்கு அந்தந்த வங்கிகளிலேயே பிரீமியத் தொகை வசூலிக்கப்படுகிறது.

÷கடன் பெறாத விவசாயிகள் காப்பீட்டுத் தொகையில் 2 சதவீதத்தை பிரீமியமாகச் செலுத்த வேண்டும். இதில் சிறு, குறு விவசாயிகளுக்கு 55 சதவீதமும், மற்ற விவசாயிகளுக்கு 50 சதவீதமும் பிரீமியத் தொகையில் மானியமாக, சம்மந்தப்பட்ட காப்பீட்டு நிறுவனத்துக்கு தமிழக அரசால் செலுத்தப்படுகிறது.

÷அதாவது ஏக்கருக்கு ரூ. 13,024-க்கு காப்பீடு செய்ய விரும்பும் கடன்பெறாத சிறு, குறு விவசாயிகளுக்கு

ரூ. 117-ம், இதர விவசாயிகளுக்கு ரூ. 130-ம், பிரீமியமாகச் செலுத்த வேண்டும். கடன் பெறும் அனைத்து விவசாயிகளுக்கும் பிரீமியத் தொகை ஏக்கருக்கு ரூ. 130 ஆகும்.

÷பிரீமியத் தொகையினை 16-12-2010-க்குள் உரிய படிவத்துடன் சம்மந்தப்பட்ட தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியிலோ, தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளிலோ செலுத்தி விவசாயிகள் பயனடையுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

÷இதற்கான படிவங்கள் அந்தந்தப் பகுதி வேளாண் உதவி இயக்குநர் அலுவலகங்களில் கிடைக்கும். மேலும், விவரங்களை அருகாமையில் உள்ள வேளாண் உதவி இயக்குநர்கள், வேளாண் அலுவலர்கள் மற்றும் உதவி வேளாண் அலுவலர்களைத் தொடர்பு கொண்டு தெரிந்து கொள்ளலாம் என்று அந்த செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.

**மழைக்காலத்துக்கு முன்... விவசாயிகளுக்கு யோசனைகள்**

First Published : 07 Oct 2010 12:00:00 AM IST



முழ்கிய நிலையில் நெல் வயல் (கோப்பு படம்).

புதுச்சேரி: அளவுக்கு மீறிய உணவு மனிதனுக்கு எப்படி கெடுதலை உண்டாக்குகிறதோ அதே போல்தான் தண்ணீர் சூழ்ந்து காணப்படும் வயல்களிலும் சாகுபடி ஆரோக்கியமாக இருக்காது. மனிதன் சாப்பிடும் உணவு கழிவாக வெளியேறுவதற்கு வசதி இருப்பதைப் போன்றதுதான் வடிகால் வசதியும்.

÷வயலில் தேவைக்கும் அதிகமாக இருக்கும் தண்ணீர் வெளியேற வடிகால் வசதி இருக்க வேண்டும். ஏரிப் பாசனம், கிணற்றுப் பாசனம், ஆழ்குழாய் பாசனம் என்று எந்தப் பாசனமாக இருந்தாலும் சாகுபடியில் நீர் மேலாண்மை என்பது முக்கியமான அம்சம்.

÷விளை நிலங்களிலும், அதையொட்டிய பகுதிகளிலும் ரியல் எஸ்டேட் வியாபாரம் செய்பவர்கள் கல்லை நட்டு காசு பார்த்து வருகின்றனர்.

இவர்கள் பெரும்பாலும் அருகில் புறம்போக்கு நிலங்கள் இருக்கும் பகுதிகள், வடிகால் உள்ள பகுதிகளை ஒட்டியுள்ள நிலங்களை வாங்கி மனைகளாகப் பிரித்து விற்பனை செய்து வருகின்றனர். இதனால் கொஞ்சம் நாளில் அந்த வடிகால் வாய்க்கால்கள் காணாமல் போய்விடுகின்றன. எனவே இதுகுறித்து விவசாயிகள் எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டும்.

÷புதுச்சேரி உழவர் பயிற்சி நிலையத்தின் துணை இயக்குநர் எம்.வேதாசலம் இதுகுறித்து கூறுகையில், "பெரிய வடிகால் வாய்க்கால்கள் காணாமல் போனதால்தான் சாகுபடி செய்யப்படும் நிலங்களில் மழைக் காலங்களில் நீர் வெளியேறாமல் தேங்கி நிற்கிறது' என்கிறார்.

÷"மழைக்காலம் தொடங்கும் முன்பாக வடிகால் வசதியைச் சீரமைத்தால்தான் முடியும். மழைக்காலத்தில் இதைச் சீரமைப்பது கடினமானப் பணி. அதை விவசாயிகள் இப்போது செய்து முடிக்க வேண்டும் என்கிறார்' வேளாண்துறை இடுபொருள் பிரிவின் துணை இயக்குநர் வி.ராஜேந்திரன்.

÷சொர்ணாவாரி நெல் பருவம் முடிந்து இப்போது சம்பா சாகுபடிக்காக விவசாயிகள் நாற்று விட்டுள்ளனர். ஒரு சிலர் அதற்காகத் தயார் செய்து வருகின்றனர். ஏரி உள்ளிட்ட நீர்பிடிப்புப் பகுதிகளுக்கு நீரைக் கொண்டு வந்து சேர்க்கும் கால்வாய் மற்றும் நீரைத் தேக்கி நிற்கும் ஏரியில் 100 நாள் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் அரசு பராமரிப்பு செய்து கொடுக்கிறது.

÷ஏரியிலிருந்து பாசனத்துக்கு திறந்து விடப்படும் நீர் தங்குதடையின்றி செல்லவும், வயலிலிருந்து மிஞ்சிய நீர் வெளியேறவும் வடிகால் வசதியை விவசாயிகள் மழைக்காலத்துக்கு முன்பு சீரமைக்க வேண்டியது அவசியம்.

÷இது குறித்து வேளாண்துறை இடுபொருள் பிரிவின் வில்லியனூர் பகுதி துணை இயக்குநர் சி.சிவராமன் கூறுகையில், "இப்போது மழைக்காலம் தொடங்கும் நிலை இருக்கிறது. அதனால் விவசாயிகள் முன்னெச்சரிக்கையாக வடிகால் வசதிகளைச் சீரமைத்தால் பாதிப்புகளைக் குறைக்க முடியும். சுதந்திர தினவிழா, காந்தி ஜெயந்தி விழா போன்றவற்றை நாம் கொண்டாடுகிறோம். அது போன்று விவசாயிகள் ஒவ்வொரு ஆண்டும் மழைக்காலம் தொடங்கும் முன்பாக வடிகால் வசதியைச் சீரமைத்துக் கொண்டு சாகுபடி செய்ய வேண்டும். அந்தக் காலத்தில் விவசாயிகள் ஏற்றத்தின் மூலம் காலால் மிதித்து தண்ணீர் இறைப்பார்கள்.

அப்போது நீர் நிலையில் இருந்து தண்ணீர் நிரப்பிக் கொண்டு கால்வாயில் கொட்டும் பொருளுக்கு "சால்' என்று பெயர். அப்போது இருந்த விவசாயிகள் வடிகால் வசதியை நன்றாகப் பராமரித்து வைத்திருப்பார்கள். ஒரு புல் ஒரு சால் தண்ணீரை மறிக்கும் என்பார்கள்.

இப்போது விவசாயிகளிடம் வடிகால் வசதியைப் பராமரிக்கும் பழக்கம் குறைந்துவிட்டது. வடிகால் வசதி நன்றாக இருந்தால் மழை, வெள்ளம் வந்தாலும் பயிர் அழுகாமல் தடுக்க முடியும். இல்லையென்றால் பயிர் அழுகிவிடும். இதனால் விவசாயிகளுக்குத்தான் நஷ்டம். சேதத்தைத் தவிர்க்க வடிகால் வசதியைப் பராமரிக்க வேண்டியது அவசியம்' என்றார் சிவராமன்.

**'ராஜராஜன் 1000' நெல் சாகுபடிக்கு மானியம்**

First Published : 06 Oct 2010 12:47:14 PM IST

Last Updated : 06 Oct 2010 01:34:00 PM IST

சிதம்பரம், அக்.5: குறைந்த செலவில் கூடுதல் மகசூல் தரும் 'ராஜராஜன் 1000' நெல் சாகுபடிக்கு ஏக்கருக்கு ரூ. 3 ஆயிரத்துக்கான இடுபொருள்கள் மானியமாக விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது என பரங்கிப்பேட்டை வேளாண் உதவி இயக்குநர் இ. தனசேகர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:

சிதம்பரம், பரங்கிப்பேட்டை பகுதியில் சுமார் 9 ஆயிரம் ஹெக்டேர் பரப்பில் சம்பா நெல் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. 'ராஜராஜன் 1000' நெல் சாகுபடிக்கு ஒரு ஏக்கருக்கு ஒரு கிலோ விதை நெல் மட்டும் போதுமானதாகும். ஒரு ஏக்கருக்கு 1 சென்ட் என்ற அளவில் பாய் நாற்றங்கால் விதைப்பு செய்ய வேண்டும்.

நடவுக்கு 13 முதல் 15 நாள் வயதுடைய இளம் நாற்றுக்களை குத்துக்கு ஒன்று வீதம் 22.5 செ.மீட்டருக்கு 22.5 செ.மீட்டர் என்ற அளவில் சதுர முறையில் நடவு செய்ய வேண்டும். இதற்கு மார்க்கர் கருவியை பயன்படுத்தலாம். நடவு வயலில் களை எடுக்க கோனோவீடர் எனும் களைக்கருவியை நட்ட 10-ம் நாள் முதல் 10 நாட்கள் இடைவெளியில் 4 முறை பயன்படுத்த வேண்டும். இக்கருவியை பயன்படுத்துவதால் களைகள் கீழே தள்ளப்பட்டு மக்கி உரமாக பயிருக்கு கிடைப்பதுடன், நல்ல காற்றோட்டமும் பயிருக்கு கிடைக்கும்.

இலை வண்ண அட்டையை பயன்படுத்தி தேவையானபோது தழைச்சத்தினை பயிருக்கு இட வேண்டும். செம்மை நெல் சாகுபடியில் சாதாரண முறையை விட, 25 சதவீத மகசூல் கூடுதலாக கிடைக்க வாய்ப்பு உள்ளது.

ஒருங்கிணைந்த தானிய அபிவிருத்தி திட்டத்தின் கீழ் பரங்கிப்பேட்டை வட்டாரத்தில் 5 கிராமங்களில் 'ராஜராஜன் 1000' நெல் சாகுபடி செயல் விளக்கத் தளைகள் அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கிராமத்திலும் 25 ஏக்கர் பரப்பில் தொகுப்பாக இந்த செயல் விளக்கத்தளைகள் அமைக்கப்படவுள்ளன. அச்செயல் விளக்கத்துக்கு ஒரு ஏக்கருக்கு ரூ. 3 ஆயிரத்துக்கான இடுபொருள்கள் மானியத்தில் விவசாயிகளுக்கு வழங்கப்படவுள்ளது.

எனவே, தங்களது நிலங்களில் 'ராஜராஜன் 1000' நெல் சாகுபடி செயல் விளக்கத்தளைகளை அமைக்க விரும்பும் விவசாயிகள், தங்கள் பகுதி வேளாண்துறை அலுவலர்களை தொடர்பு கொண்டு பயன்பெறலாம் என தனசேகர் தெரிவித்துள்ளார்.

**கறவை மாடுகளுக்கு சத்தான புல் வளர்ப்பது எப்படி? வேளாண் மாணவர்கள் விளக்கம்**

First Published : 06 Oct 2010 12:47:43 PM IST

Last Updated : 06 Oct 2010 01:33:30 PM IST

கடலூர்.அக்.5: கடலூர் அருகே மணக்குப்பம் கிராமத்தில் முகாமிட்டு இருக்கும் அன்பில் தர்மலிங்கம் வேளாண் கல்லூரி மாணவர்கள், விவசாயிகள் தங்கள் கறவை மாடுகளுக்கு சத்தான புல் வளர்க்கும் முறைகளை விளக்கிக் கூறினர்.

மணக்குப்பம் கிராமத்தில் கால்நடை பராமரிப்புத் துறை இணை இயக்குநர் இளங்கோவன் தலைமையில், செவ்வாய்க்கிழமை கால்நடை மருத்துவ முகாம் நடத்தப்பட்டது.

இதில் பங்கேற்ற வேளாண் கல்லூரி மாணவர்கள், மாட்டுத் தீவனம் குறித்த விழிப்புணர்வை விவசாயிகளிடம் ஏற்படுத்தினர்.

கோ 3 ரகம் புல் கறவை மாடுகளுக்கு ஏற்றது. இதைத் தீவனமாக உட்கொள்ளும் கறவை மாடுகள் கூடுதலாக பால் கறக்கும், மாடுகள் விரும்பிச் சாப்பிடும். சினை பிடிக்காத மாடுகளுக்கு சினை பிடிக்கவும் ஏதுவாக இருக்கும். 10 சென்ட் நிலத்தில் பயிரிடப்படும் இந்த ரக புல்லைக் கொண்டு, ஆண்டு முழுவதும் ஒரு பசுவைப் பராமரிக்க முடியும்.

இதனால் மாட்டுத் தீவனச் செலவும் குறையும் என்றும் எடுத்துரைத்தனர். மாடுகளுக்கு காப்பீடு செய்வதின் அவசியம் பற்றியும் மாணவர்கள் விளக்கம் அளித்தனர்.

**தொடர் மழையால் பழனி பகுதியில் கத்தரி, நெற்பயிர்கள் சேதம்**

First Published : 06 Oct 2010 11:11:41 AM IST

பழனி, அக். 5: பழனி சுற்று வட்டாரப் பகுதிகளில் பெய்துவரும் தொடர் மழையால், வேர் அழுகல் நோயால் கத்தரிகாயும், பல ஏக்கர் பரப்பளவிலான நெற்பயிரும் பாதிக்கப்பட்டுள்ளன.

பழனியின் சுற்றுப் பகுதிகளில் பலவகையான காய்கறிகள், பழங்கள் விவசாயம் செய்யப்பட்டு, தமிழகத்தின் அனைத்துப் பகுதிகளுக்கும் அனுப்பப்பட்டு வருகின்றன. இந்நிலையில், கடந்த சில தினங்களாக பெய்துவரும் கனமழையால், பாலசமுத்திரம், நெய்க்காரப்பட்டி, அமரபூண்டி, கீரனூர் உள்ளிட்ட பல பகுதிகளில் நெல், கரும்பு முதலியவை பயிர் செய்யப்பட்டு வருகின்றன.

இப்பகுதியில் தண்ணீர் பற்றாக்குறை காலங்களில் கம்பு, சோளம், தக்காளி, கத்தரி போன்றவை பயிர் செய்யப்படுகின்றன. கடந்த மாதங்களில் இப்பகுதிகளில் மழை பொய்த்துவிட்ட காரணத்தினால், விவசாயிகள் தக்காளி, கத்தரி போன்றவற்றை சாகுபடி செய்தனர். இவற்றை அறுவடை செய்யும் காலக்கட்டமான தற்போது தொடர் மழை பெய்து வருவதால், பயிர்கள் அனைத்தும் அழுகி சேதமடைந்துள்ளன.

இதேபோன்று, பழனியை அடுத்துள்ள அய்யம்புள்ளி, சண்முகநதி உள்ளிட்ட பல பகுதிகளில் நெற்பயிர்கள் மழை நீரில் மூழ்கியுள்ளன. எனவே, இவற்றை அறுவடை செய்யமுடியாமல் விவசாயிகள் தவித்து வருகின்றனர்.

இந்தத் தொடர் மழையால் பாதிப்படைந்துள்ள விவசாயிகள் பலரும், அரசு தங்களுக்கு உரிய இழப்பீடு தரவேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**மழைக்காலத்துக்கு முன்... விவசாயிகளுக்கு யோசனைகள்**

First Published : 07 Oct 2010 12:00:00 AM IST



முழ்கிய நிலையில் நெல் வயல் (கோப்பு படம்).

புதுச்சேரி: அளவுக்கு மீறிய உணவு மனிதனுக்கு எப்படி கெடுதலை உண்டாக்குகிறதோ அதே போல்தான் தண்ணீர் சூழ்ந்து காணப்படும் வயல்களிலும் சாகுபடி ஆரோக்கியமாக இருக்காது. மனிதன் சாப்பிடும் உணவு கழிவாக வெளியேறுவதற்கு வசதி இருப்பதைப் போன்றதுதான் வடிகால் வசதியும்.

÷வயலில் தேவைக்கும் அதிகமாக இருக்கும் தண்ணீர் வெளியேற வடிகால் வசதி இருக்க வேண்டும். ஏரிப் பாசனம், கிணற்றுப் பாசனம், ஆழ்குழாய் பாசனம் என்று எந்தப் பாசனமாக இருந்தாலும் சாகுபடியில் நீர் மேலாண்மை என்பது முக்கியமான அம்சம்.

÷விளை நிலங்களிலும், அதையொட்டிய பகுதிகளிலும் ரியல் எஸ்டேட் வியாபாரம் செய்பவர்கள் கல்லை நட்டு காசு பார்த்து வருகின்றனர்.

இவர்கள் பெரும்பாலும் அருகில் புறம்போக்கு நிலங்கள் இருக்கும் பகுதிகள், வடிகால் உள்ள பகுதிகளை ஒட்டியுள்ள நிலங்களை வாங்கி மனைகளாகப் பிரித்து விற்பனை செய்து வருகின்றனர். இதனால் கொஞ்சம் நாளில் அந்த வடிகால் வாய்க்கால்கள் காணாமல் போய்விடுகின்றன. எனவே இதுகுறித்து விவசாயிகள் எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டும்.

÷புதுச்சேரி உழவர் பயிற்சி நிலையத்தின் துணை இயக்குநர் எம்.வேதாசலம் இதுகுறித்து கூறுகையில், "பெரிய வடிகால் வாய்க்கால்கள் காணாமல் போனதால்தான் சாகுபடி செய்யப்படும் நிலங்களில் மழைக் காலங்களில் நீர் வெளியேறாமல் தேங்கி நிற்கிறது' என்கிறார்.

÷"மழைக்காலம் தொடங்கும் முன்பாக வடிகால் வசதியைச் சீரமைத்தால்தான் முடியும். மழைக்காலத்தில் இதைச் சீரமைப்பது கடினமானப் பணி. அதை விவசாயிகள் இப்போது செய்து முடிக்க வேண்டும் என்கிறார்' வேளாண்துறை இடுபொருள் பிரிவின் துணை இயக்குநர் வி.ராஜேந்திரன்.

÷சொர்ணாவாரி நெல் பருவம் முடிந்து இப்போது சம்பா சாகுபடிக்காக விவசாயிகள் நாற்று விட்டுள்ளனர். ஒரு சிலர் அதற்காகத் தயார் செய்து வருகின்றனர். ஏரி உள்ளிட்ட நீர்பிடிப்புப்

பகுதிகளுக்கு நீரைக் கொண்டு வந்து சேர்க்கும் கால்வாய் மற்றும் நீரைத் தேக்கி நிற்கும் ஏரியில் 100 நாள் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் அரசு பராமரிப்பு செய்து கொடுக்கிறது.

÷ஏரியிலிருந்து பாசனத்துக்கு திறந்து விடப்படும் நீர் தங்குதடையின்றி செல்லவும், வயலிலிருந்து மிஞ்சிய நீர் வெளியேறவும் வடிகால் வசதியை விவசாயிகள் மழைக்காலத்துக்கு முன்பு சீரமைக்க வேண்டியது அவசியம்.

÷இது குறித்து வேளாண்துறை இடுபொருள் பிரிவின் வில்லியனூர் பகுதி துணை இயக்குநர் சி.சிவராமன் கூறுகையில், "இப்போது மழைக்காலம் தொடங்கும் நிலை இருக்கிறது. அதனால் விவசாயிகள் முன்னெச்சரிக்கையாக வடிகால் வசதிகளைச் சீரமைத்தால் பாதிப்புகளைக் குறைக்க முடியும். சுதந்திர தினவிழா, காந்தி ஜெயந்தி விழா போன்றவற்றை நாம் கொண்டாடுகிறோம். அது போன்று விவசாயிகள் ஒவ்வொரு ஆண்டும் மழைக்காலம் தொடங்கும் முன்பாக வடிகால் வசதியைச் சீரமைத்துக் கொண்டு சாகுபடி செய்ய வேண்டும். அந்தக் காலத்தில் விவசாயிகள் ஏற்றத்தின் மூலம் காலால் மிதித்து தண்ணீர் இறைப்பார்கள்.

அப்போது நீர் நிலையில் இருந்து தண்ணீர் நிரப்பிக் கொண்டு கால்வாயில் கொட்டும் பொருளுக்கு "சால்' என்று பெயர். அப்போது இருந்த விவசாயிகள் வடிகால் வசதியை நன்றாகப் பராமரித்து வைத்திருப்பார்கள். ஒரு புல் ஒரு சால் தண்ணீரை மறிக்கும் என்பார்கள்.

இப்போது விவசாயிகளிடம் வடிகால் வசதியைப் பராமரிக்கும் பழக்கம் குறைந்துவிட்டது. வடிகால் வசதி நன்றாக இருந்தால் மழை, வெள்ளம் வந்தாலும் பயிர் அழுகாமல் தடுக்க முடியும். இல்லையென்றால் பயிர் அழுகிவிடும். இதனால் விவசாயிகளுக்குத்தான் நஷ்டம். சேதத்தைத் தவிர்க்க வடிகால் வசதியைப் பராமரிக்க வேண்டியது அவசியம்' என்றார் சிவராமன்.

**அரியலூரில் பலத்த மழை : விவசாயிகள் மகிழ்ச்சி**

First Published : 06 Oct 2010 11:44:22 AM IST

Last Updated : 06 Oct 2010 01:28:19 PM IST

அரியலூர்,அக்.5: அரியலூர் மாவட்டத்தில் திங்கள்கிழமை இரவு பெய்த பலத்த மழையால் மானாவாரி பயிர்களை பயிரிட்டிருந்த விவசாயிகள் பெரும் மகிழ்ச்சியடைந்தனர்.

தமிழகத்தில் மற்ற மாவட்டங்களில் எல்லாம் மழை கொட்டிக் கொண்டிருக்கும் நேரத்தில், கோடையை போல வெயிலின் தாக்கம் இருந்ததால் பொதுமக்கள் கடுமையாக அவதிப்பட்டு வந்தனர்.

இந்நிலையில், திங்கள்கிழமை மாலை வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டு இடி, மின்னலுடன் பலத்த மழை பெய்தது. சுமார் ஒன்றரை மணி நேரத்துக்கும் மேலாக பெய்த மழையால் சாலைகளில் மழைநீர் பெருக்கெடுத்தோடியது.

செவ்வாய்க்கிழமை காலை 8 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் அரியலூரில் 77 மி.மீட்டரும், திருமானூரில் 28 மி.மீட்டரும் மழை பதிவாகியது. மாவட்டத்தின் பெரும்பாலான பகுதிகளிலும் நல்ல மழை பெய்தது.

அரியலூர் மாவட்டத்தில் திங்கள்கிழமை பெய்த மழையால் மானாவாரி பயிர்களை பயிரிட்டிருந்த விவசாயிகள் மிகவும் மகிழ்ச்சியடைந்தனர். அரியலூர் ஒன்றியத்தில் கம்பு, சோளம், பருத்தி, கடலை போன்ற மானாவாரி பயிர்கள் 75,000 ஏக்கரிலும், திருமானூர், தா.பழூர் ஒன்றியங்களில் 25,000 ஏக்கரில் நெல் பயிரும், 30,000 ஏக்கரில் கரும்பும் விவசாயிகள் பயிரிட்டுள்ளனர்.

பயிரிட்டு 20 முதல் 25 நாள்கள் கழித்து தற்போது மழை பெய்திருப்பதால் மானாவாரி பயிர்களை பயிரிட்டிருந்த தங்களுக்கு தற்போது களையெடுப்பது எளிதாகிவிட்டது. மழை பெய்யாவிட்டால் வறண்ட நிலத்தில்தான் களையெடுக்க வேண்டியிருந்திருக்கும். தற்போது பெய்த மழை எங்களுக்கு பெரும் பயனை ஏற்படுத்தியுள்ளது என்கின்றனர் விவசாயிகள்.

**உரத் தட்டுப்பாட்டை போக்க பாமக வலியுறுத்தல்**

First Published : 06 Oct 2010 12:21:12 PM IST

தருமபுரி, அக். 5: தருமபுரி மாவட்டத்தில் நிலவும் உரத் தட்டுப்பாட்டைப் போக்க மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பாமக வலியுறுத்தியுள்ளது.

இதுகுறித்து கட்சியின் மாவட்டச் செயலர் பி.சாந்தமூர்த்தி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பது:

தருமபுரி மாவட்டத்தில் கடந்த 5 ஆண்டுகளாக பருவ மழை பெய்யவில்லை. தற்போதுதான் ஓரளவு மழை பெய்துள்ளது. இதனால் விவசாயிகள் பயிர்களை விளைவித்துள்ளனர்.

கூட்டுறவு நிறுவனங்கள் முதல் தனியார் கடைகள் வரையில் உரத் தட்டுப்பாடு காணப்படுகின்றது. உரிய நேரத்தில் உரம் இடாவிட்டால், பயிர் மகசூல் குறைய வாய்ப்புள்ளது. இதனால் விவசாயிகளுக்கு நஷ்டமும் ஏற்படும். எனவே, அரசு மற்றும் தனியார் கடைகளில் யூரியா, பொட்டாஷ், டிஏபி உள்ளிட்ட அனைத்து உர வகைகளும் தடையின்றி கிடைக்க மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார் சாந்தமூர்த்தி.

**நெல் கொள்முதலில் ஈரப்பதத்தை உயர்த்தக் கோரிக்கை**

First Published : 06 Oct 2010 11:50:42 AM IST

திருவாரூர், அக். 5: நெல் கொள்முதலில் ஈரப்பதத்தை உயர்த்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென அதிமுக கோரிக்கை விடுத்துள்ளது.

இதுகுறித்து அதிமுக மாவட்டச் செயலர் ஆர். காம்ராஜ் வெளியிட்ட அறிக்கை:

ஆறுகள், வாய்க்கால்களில் நீர் வரத்தும் இல்லை. ஆழ்குழாய் மூலம் பாசனம் பெற மின்சாரம் பற்றாக்குறை. இதற்கிடையே விவசாயத்தை மேற்கொள்ள வேண்டிய நிலையில் விவசாயிகள் உள்ளனர்.

நிகழாண்டில் உரிய நேரத்தில் தண்ணீர் திறக்காத நிலையில், குறுவை நெல் சாகுபடியை மிகுந்த சிரமத்துக்கிடையே மேற்கொண்டுள்ள விவசாயிகள், தங்களது நெல்லை விற்பனை செய்ய அரசு கொள்முதல் நிலையங்கள் இல்லாமல் அவதிப்பட்டு வருகின்றனர். அங்கொன்றும், இங்கொன்றுமாக திறக்கப்பட்டுள்ள கொள்முதல் நிலையங்களிலும் அதிக ஈரப்பதத்தைக் காரணம் காட்டி விவசாயிகளை திருப்பி அனுப்பி விடுகின்றனர்.

திருவாரூர் மாவட்டத்தில் தொடர்ந்து மழை பெய்து வருவதால், தற்போது அறுவடை செய்யப்படும் நெல் அதிக ஈரப்பதத்துடன் இருப்பதைத் தவிர்க்க முடியாது. எனவே, 17 சதவீத ஈரப்பதம் என்பதை 22 சதவீதமாக உயர்த்திக் கொள்முதல் செய்ய வேண்டுமென விவசாயிகள் தொடர்ந்து கோரிக்கை விடுத்தும், அரசு அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை.

விவசாயிகளின் இந்த கோரிக்கையை அலட்சியம் செய்யும் திமுக அரசின் நடவடிக்கை கண்டிக்கத்தக்கது. எனவே, விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு, அனைத்து இடங்களிலும் கொள்முதல் நிலையங்களைத் திறக்க வேண்டும். 22 சதவீத ஈரப்பதம் உள்ள நெல்லையும் கொள்முதல் செய்ய வேண்டும் என ஆர். காம்ராஜ் கேட்டுக் கொண்டுள்ளார்.

தினமலர்

**வயலில் தண்ணீர் பாய்ந்ததை அறியும் "அலாரம்' கண்டுபிடிப்பு**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 06,2010,23:32 IST

சிதம்பரம் : வயலில் போதுமான அளவு தண்ணீர் பாய்ந் ததை அறியும் அலாரத்தை அண்ணாமலைப் பல்கலைக் கழக வேளாண்மை மாணவர் கண்டுபிடித் துள்ளார்.

விவசாயிகள் தங்கள் நிலங்களில் தண்ணீர் பாய்ச்சும் போது இரவு நேரங்களில் கண் விழிக்க வேண்டும். அப்படியே கண் விழித்தாலும் போதுமான அளவு தண்ணீர் பாய்ந்து விட்டதா என துல்லியமாக அறிந்து கொள்ள முடியாது. அதிகமாக தண்ணீர் பாய்ந்தாலும் மின்சாரம் அதிக அளவில் செலவாகும். இதற்கு தீர்வு காணும் வகையில் அண்ணாமலைப் பல்கலைக் கழக வேளாண் கல்லூரி இளநிலை இறுதியாண்டு மாணவர் ராஜேஷ்குமார், வயலில் தண்ணீர் பாய்ந்து விட்டதை அறிந்து கொள்ள "அலாரம்' கண்டுபிடித்துள்ளார்.

இரண்டு அங்குலத்தில் மூன்று அடி நீள பிளாஸ் டிக் பைப்பில் இக்கருவி வடிவமைக்கப்பட்டுள் ளது. கருவியில் மின் ஒயர் மூலம் இணைத்து தனியாக நமக்குத் தேவையான இடத்தில் "அலாரம்' பொருத்திக் கொள்ளலாம். வயலில் தண்ணீர் பாய வேண்டிய அளவை அக்கருவியில் பதிவு செய்து விட்டால் பதிவு செய்யப்பட்ட தண்ணீர் பாய்ந்தவுடன் "அலாரம்' ஒலிக்கும். அதன் பிறகு மோட் டாரை ஆப் செய்து கொள்ளலாம். எளிய முறையில் யாரும் பயன் படுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ள இக் கருவியை 200 ரூபாய் செலவிலேயே செய்து விட முடியும் என்கிறார் மாணவர் ராஜேஷ்குமார். சிதம்பரம் அடுத்த வலசக்காடு கிராமத்தில் பயிற்சி பெற்று வரும் வேளாண் புல இறுதியாண்டு மாணவர்கள் விவசாயிகளுக்கு "அலா ரம்' குறித்து விளக்கம் அளித்தனர்.

**பழைய முறையில் பயிர் கடன் விவசாயிகள் சங்கம் கோரிக்கை**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 06,2010,23:44 IST

செஞ்சி : இந்திய விவசாயிகள் முன்னேற்ற சங்கத்தின் ஆலோசனை கூட்டம் நாட் டார்மங்கலத்தில் நடந்தது.
தலைமை நிலைய செயலாளர் அர்ச்சுனன் தலைமை தாங்கினார். பொதுச் செயலாளர் ஜானகிராமன் வரவேற்றார். சங்க நிறுவனர் வக்கீல் வசந்தி சிறப்புரை நிகழ்த்தினார். மாநில தலைவர் முருகேசன் விளக்க உரை நிகழ்த்தினார். நிர்வாகிகள் வைத்தியலிங்கம், பத்மநாபன், சோமசுந்தரம், ஏழுமலை, கிருஷ்ணமூர்த்தி, ஆனந்தராஜ், திருநாவுக்கரசு,ராஜ்குமார் உட்பட பலர் கலந்து கொண்டனர்.
இதில் வல்லம் ஒன்றியத்தில் உள்ள 12 கூட்டுறவு வேளாண்மை சங்கங்களில் 10 கோடி ரூபாய் கடன் வழங்க அரசு நிதி ஒதுக்கியும், கடன் வழங்கப்படாததை கண்டிப்பது, பழைய முறைப் படி சிட்டா அடங் கல் மூலம் விவசாயிகளுக்கு வட்டியில்லா பயிர் கடன் வழங்க வேண்டும். மார்க்கெட் கமிட்டிகளில் விவசாயிகளுக்கு விலை பட்டியலுடன், டோக்கன் வழங்கி ஏ.டி.எம்., மூலம் பணம் பட்டுவாடா செய்ய வேண்டும் என தீர்மானங் கள் நிறைவேற்றப்பட்டன.

**"மா' சாகுபடிக்கு அரசு மானியம்தோட்டக்கலை துறை அறிவிப்பு**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 07,2010,02:45 IST

நாமக்கல்: "ஒரு ஹெக்டேர் மா நடவு செய்ய 40 ஆயிரம் ரூபாய் அரசு மானியம் வழங்கப்படுகிறது' என, தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் அந்தோணி பால்ராஜ் தெரிவித்துள்ளார்.அவர் வெளியிட்ட அறிக்கை:பள்ளிபாளையம் வட்டாரத்தில் தோட்டக்கலை பயிர்கள் சாகுடி செய்யும் விவசாயிகள் பயன்பெறும் வகையில், அரசு மானிய திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தாண்டு உயர் விளைச்சலுக்கான உயர் தொழில்நுட்ப திட்டத்தின் கீழ், மா பயிரில் நெருக்கி நடவு சாகுபடிக்காக ஒரு ஹெக்டேருக்கு 40 ஆயிரம் ரூபாய் மானியம் வழங்கப்படுகிறது.மா பயிரில் ஒரு ஹெக்டேருக்கு செடிகளுக்கு 13 ஆயிரத்து 500 ரூபாய், நடவுக்கு 4,300 ரூபாய், உயிர் உரத்துக்கு 1,000 ரூபாய், நீரில் கரையும் உரத்துக்கு 10 ஆயிரம் ரூபாய் மற்றும் சொட்டு நீர்ப்பாசனம் அமைக்க 11 ஆயிரத்து 200 ரூபாய் உட்பட மொத்தம் 40 ஆயிரம் ரூபாய் அரசு மானியம் வழங்குகிறது.

திசு வளர்ப்பு வாழை சாகுபடிக்கு ஒரு ஹெக்டேர் கன்றுகளுக்கு 36 ஆயிரம் ரூபாய், சொட்டு நீர்ப்பசானம் அமைக்க 11 ஆயிரத்து 200 ரூபாய் மற்றும் பயிர் பாதுகாப்பு மருந்து இனத்தில் 2,800 ரூபாய் என மொத்தம் 50 ஆயிரம் ரூபாய் மானியம் வழங்கப்படுகிறது.மஞ்சள் மற்றும் மலர்கள் சாகுபடிக்கு ஹெக்டேருக்கு 7,500 ரூபாய் அரசு மானியம் வழங்குகிறது. விவசாயிகள் அரசு மானியம் பெற பள்ளிபாளையம் வட்டார வேளாண் விரிவாக்க மைய தோட்டக்கலை துறை அலுவலகத்தில் முன்பதிவு செய்து கொள்ளலாம்.இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

### ரூ.1. 20 லட்சத்துக்குவாழைத்தார் ஏலம்

பதிவு செய்த நாள் : அக்டோபர் 07,2010,02:34 IST

நாமக்கல்: "ஒருவந்தூர் தொடக்க வேளாண் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், ஒரு லட்சத்து 20 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான வாழைத்தார் ஏலம் நடந்தது' என, சங்க துணைப்பதிவாளர் ஆதிநாயகி தெரிவித்தார்.அவர் வெளியிட்ட அறிக்கை:நாமக்கல் வேளாண் உற்பத்தியாளர்கள் கட்டுறவு விற்பனைச் சங்கம் மூலம் ஒருவந்தூர் தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கத்தில், வாரந்தோறும் புதன் கிழமை வாழைத்தார் ஏலம் நடக்கிறது. நேற்று நடந்த ஏலத்தில் 1,100 வாழைத்தார் கெண்டு வரப்பட்டன.ஒரு வாழைத்தார் அதிகபட்சம் 260 ரூபாய்க்கு ஏலம் போனது. மொத்தம் ஒரு லட்சத்து 20 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான வாழைத்தார்கள் விவசாயிகளுக்கு விற்பனை செய்து கொடுக்கப்பட்டது. மேலும், விவசாயிகளுக்கு உரிய தொகையும் உடனடியாக பட்டுவாடா செய்யப்பட்டது.
இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**வெள்ளாடுகளுக்கு செயற்கை கருவூட்டல் : இணை இயக்குனர் பேச்சு**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 07,2010,00:44 IST

மேட்டுப்பாளையம்: ""வெள்ளாடுகளுக்கான செயற்கை முறை கருவூட்டல் சோதனை முதன்முறையாக கோவையில் நடத்தப்பட்டு, முயற்சியில் முன்னேற்றமும் காணப்பட்டுள்ளது," என, கால்நடை பராமரிப்புத்துறை இணை இயக்குனர் டாக்டர் தியாகவிஜயன் பேசினார்.கால்நடை பராமரிப்பு துறை இதுவரை மாடு, எருமைகளுக்கு மட்டும் செயற்கை முறை கருவூட்டல் செய்து வந்தது. தற்போது, அவினாசிலிங்கம் அறிவியல் நிலையத்துடன் இணைந்து சோதனை அடிப்படையில் வெள்ளாடுகளுக்கு செயற்கை முறை கருவூட்டல் செய்து வருகிறது. தென்னாப்பிரிக்க போயர் இன வெள்ளாட்டு கிடாவின் உயிரணுவை கொண்டு மேட்டுப்பாளையம், காரமடை பகுதியில் 100 வெள்ளாடுகளுக்கு செயற்கை கருவூட்டல் செய்யப்பட்டது. இதில், 80 ஆடுகள் சினை பிடித்து தலா 2 முதல் 4 குட்டிகளை ஈன்றுள்ளன.

இந்த ஆடுகளுக்கும், குட்டிகளுக்கும் குடல்பழு நீக்கம், தடுப்பூசி போடும் முகாம் காரமடை கால்நடை மருத்துவமனையில் நடந்தது.முகாமுக்கு அவிநாசி கால்நடை உதவி இயக்குனர் டாக்டர் சண்முகம் தலைமை வகித்தார். கோவை மண்டல கால்நடை பராமரிப்புத்துறை இணை இயக்குனர் டாக்டர் தியாக விஜயன் பேசுகையில், ""செயற்கை முறை கருவூட்டல் பசு மற்றும் எருமைகளுக்கு மட்டுமே உள்ளது. தற்போது, சோதனை முறையில் முதன் முறையாக 100 வெள்ளாடுகளுக்கு செயற்கை முறை கருவூட்டல் செய்யப்பட்டது. இதில், 80 ஆடுகள் குட்டி போட்டுள்ளன. குட்டிகளின் எடை 2.5 முதல் 3.5 கிலோ வரை உள்ளன. நல்ல ஆரோக்கியமாகவும், சுறுசுறுப்பாகவும் குட்டிகள் உள்ளன. இந்த செயற்கை கருவூட்டல் முறையை, துறை ரீதியாக தமிழகம் முழுவதும் அறிமுகப்படுத்த, பரிசோதனை முறை ஊக்கம் அளிப்பதாக அமைந்துள்ளது," என்றார். முகாமில், காரமடை கால்நடை டாக்டர் சுரேஷ்குமார் வரவேற்றார். கால்நடை உதவியாளர்கள் சுகுமார், பன்னீர்செல்வம் மற்றும் விவசாயிகள் பங்கேற்றனர். அவினாசிலிங்கம் வேளாண் அறிவியல் நிலைய கால்நடை பிரிவு உதவியாளர் ராஜு நன்றி கூறினார்.

**மானிய விலையில் வெண்டை விதை**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 07,2010,00:42 IST

மேட்டுப்பாளையம்: ஒருங்கிணைந்த தோட் டக்கலை அபிவிருத்தித் திட்டத்தில், விவசாயிகளுக்கு 50 சதவீதம் மானிய விலையில் வெண்டை விதைகள் வினியோகம் செய்யப்படுகிறது. காரமடை

வட்டாரத்தில் உள்ள ஆதிதிராவிட மற் றும் இதர விவசாயிகள், காரமடை தோட்டக்கலை அலுவலகத்தில் விதைகள் பெற்று பயனடையலாம். இத்தகவலை உதவி இயக்குனர் வசந்தி தெரிவித்தார்.

### 149 குவிண்டால் சோளம் விற்பனை

பதிவு செய்த நாள் : அக்டோபர் 07,2010,01:51 IST

திருப்பூர்: திருப்பூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் 149 குவிண்டால் சோளம் விற்பனையானது. ஒழுங்குமுறை விற்பனை கூட அதிகாரி கூறியதாவது: பருத்தி ஏழு குவிண்டால்; சோளம் 149; நெல் 80; கம்பு 35; ராகி 26; எள் இரண்டு; தேங்காய் 45; வரமிளகாய் 39 குவிண்டால் விற்றது. பருத்தி 3,900 ரூபாய் முதல் 4,200 வரை; சோளம் 1,000 முதல் 1,300 வரை; நெல் 900 முதல் 1,000 வரை; கம்பு 900 முதல் 1,000 வரை; ராகி 900 முதல் 1,000 வரை; எள் 2,500 முதல் 3,000 வரை; வரமிளகாய் குவிண்டால் 4,500 முதல் 5,500 வரை; தேங்காய் ஒன்று 5 ரூபாய் முதல் 7 ரூபாய் வரை விற்பனையானது. தேங்காய் விலை உயரும் வாய்ப்புள்ளது, என்றார்.

### நெல் சாகுபடியில் குலைநோய் விவசாயிகளுக்கு அறிவுரை

பதிவு செய்த நாள் : அக்டோபர் 07,2010,01:48 IST

திருப்பூர்: மாநில அளவிலான காதுகேளாதோர் இறகுபந்து போட்டியில், திருப்பூர் காதுகேளாதோர் பள்ளி மாணவியர் பரிசுகளை வென்றுள்ளனர். தமிழ்நாடு காதுகேளாதோர் விளையாட்டு  குழு சார்பில் மாநில அளவிலான காதுகேளாதோர் இறகுபந்து போட்டி, ஓசூரில் நடந்தது. சென்னை, கோவை, சிவகாசி உள்ளிட்ட பகுதிகளை சேர்ந்த மாணவ, மாணவியர், ஆண்கள் மற்றும் பெண்கள் பங்கேற்றனர். திருப்பூர் காதுகேளாதோர் பள்ளி மாணவர்கள் 10 பேர் பங்கேற்றனர். ஒற்றையர் பிரிவில் மோகனப்பிரியா முதலிடம், அபிநயா இரண்டாமிடம், ரத்தினம் மூன்றாமிடம் பெற்றனர். இரட்டையர் பிரிவு போட்டியில், மோகனப்பிரியா, தேன்மொழி ஆகியோர் முதலிடம் மற்றும் அபிநயா, ரத்தினம் ஆகியோர் இரண்டாமிடம் பெற்றனர். வெற்றி பெற்ற மாணவர்களுக்கு கோப்பை மற்றும் சான்றிதழை, ஓசூர் போலீஸ் உதவி கமிஷனர் ரம்யா பாரதி வழங்கினார்.

**விதைப்புக்கு முன்பாக விதைநேர்த்தி அவசியம்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 07,2010,01:43 IST

திருப்பூர்: ""விவசாயிகள், விதைப்புக்கு முன் விதைநேர்த்தி செய்து பயிர் செய்தல், வாடல்நோயில் இருந்து பயிரை பாதுகாக்கலாம்; மகசூலை அதிகரிக்கலாம்,'' என்று வேளாண் துறை இணை இயக்குனர் முத்துசாமி கூறினார். அதிகளவில் பயிர்செய்யும் பட்டமாக ஆவணி பட்டம் உள்ளது. தற்போது கிடைத்துள்ள மழைபொழிவை பயன்படுத்தி, விவசாயிகள் விதைப்பு பணியில் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர். மானாவாரியாக சோளம், பயறு வகை மற்றும் எண்ணெய் வித்து பயிர், பாசன வசதியில் மக்காச்சோளம், காய்கறி பயிரிட தயாராகி வருகின்றனர். வாடல்நோயை கட்டுப்படுத்துதல், முளைப்புத்திறன் மற்றும் மகசூலை அதிகப்படுத்த விதை நேர்த்தி செய்தல் அவசியம். வேளாண் துறை இணை இயக்குனர் முத்துசாமி கூறியதாவது: விதைப்பு பணியில் ஈடுபட்டுள்ள விவசாயிகள், விதைகளை விதை நேர்த்தி செய்தல் அவசியம்.

வேர் முடிச்சுகளில் தழைச்சத்தை சேமித்து வைக்க, மண்ணில் உள்ள மணிச்சத்தை எடுத்துக்கொள்ள உதவுகிறது. உயிரியல் பூசனக்கொல்லி மற்றும் உயிரியல் உரங்களை சேர்த்து விதைநேர்த்தி செய்ய வேண்டும். சூடோமோனாஸ், டிரைக்கோடெர்மோவிரிடி உயிரியல் காரணிகளை, ஒரு கிலோ விதைக்கு நான்கு கிராம் சேர்க்க வேண்டும். இக்கலவையை குறைந்தது 24 மணி நேரம் வைக்க வேண்டும். பின், அரிசிக்கஞ்சியுடன் ரைசோபியம் மற்றும் பாஸ்போபாக்டீரியம் உடன் விதை நேர்த்தி செய்ய வேண்டும். விதை நேர்த்தி செய்த 24 மணி நேரத்தில் விதைப்பு செய்தல் அவசியம். பயறு வகைகளை தவிர, சோளம் உள்ளிட்ட இதர பயிர்களுக்கு, ரைசோபியத்திற்கு பதிலாக "அசோஸ்பயிரில்லம்' பயன்படுத்த வேண்டும், என்றார்.

**வாழைக்காய் வரத்து அதிகரிப்பு; ஆர்.சி.எச்., பருத்தி நல்ல விலை**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 07,2010,01:40 IST

அவிநாசி: அவிநாசி வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், கடந்த வாரம் முதல் வாழைக்காய் ஏலம் நடந்து வருகிறது. இந்த வார ஏலத்துக்கு 6,125 தார் வரத்தாக இருந்தது. இது, கடந்த வாரத்தை காட்டிலும் 5,050 தார் அதிகம். வரத்து அதிகரித்ததோடு, நேந்திரன் ரகம் நல்ல விலைக்கு ஏலம் போனது. இந்த வார ஏலத்தில் நேந்திரன் ரக வாழைக்காய் கிலோவுக்கு ரூ.16 முதல் ரூ.21 வரை, கதலி ரகம் ரூ.15 முதல் ரூ.20 வரையும் ஏலத்தில் எடுக்கப்பட்டது. சங்க தனி அலுவலர் பழனிசாமி கூறுகையில், ""ஏலம் துவங்கிய இரண்டாவது வாரத்திலேயே வரத்து

நன்றாக உள்ளது. அதற்கேற்ப விலையும் உள்ளது. ரூ.3.32 லட்சத்துக்கு வர்த்தகம் நடந்தது. 61 விவசாயிகள், ஐந்து வியாபாரிகள் பயனடைந்தனர்," என்றார்.

ஆர்.சி.எச்., பருத்திக்கு நல்ல விலை: பருத்தி ஏலத்துக்கு இந்த வாரம் 225 மூட்டை (68 குவிண்டால்) வரத்தாக இருந் தது. இது, கடந்த வாரத்தை காட்டிலும் 200 மூட்டை குறைவாக இருந்தாலும்கூட, ஆர்.சி.எச்., மற்றும் பென்னி ரகங்கள் விலை கடந்த வாரத்தைவிட அதிகரித் திருந்தது. நேற்றைய ஏலத்தில் அனைத்து ரக பருத்தியின் விலை விபரம் (குவிண்டாலுக்கு) வருமாறு: எல்.ஆர்.ஏ., ரூ.3,600 முதல் ரூ.4,150 வரை, ஆர்.சி.எச்., மற்றும் பென்னி ஆகியன ரூ.3,950 முதல் ரூ.4,450 வரை, சுரபி மற்றும் எம்.சி.யு., 5 ரூ.4,100 முதல் ரூ.4,450 வரை, மட்டம் ரூ.1,900 முதல் ரூ.2,100 வரை. அவிநாசி கூட்டுறவு விற்பனை சங்க அதிகாரிகள் கூறுகையில், "இந்த வாரம் வரத்து குறைந்துள்ளது. இருப்பினும், ஆர்.சி.எச்., பென்னி ஆகியன கடந்த வாரத்தைவிட குவிண்டாலுக்கு ரூ.50 அதிகரித்து ஏலத்துக்கு போனது. இந்த வாரமும் டி.சி.எச்., ரகம் வரத்தில்லை. ரூ.2.67 லட்சத்துக்கு வர்த்தகம் நடந்ததில், 18 விவசாயிகள், ஏழு வியாபாரிகள் பயனடைந்தனர்,' என்றார்.

**பரவுகிறது தக்காளி செடிகளில் மர்மநோய்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 05,2010,23:20 IST

உடுமலை,: உடுமலை அருகே குறிச்சிக்கோட்டை பகுதியில் பயிரிடப்பட்டுள்ள தக்காளி செடிகளில், காய்ப்பு பருவத்தில் பரவி வரும் மர்மநோயால் செடிகள் கருகி வருகின்றன. இதனால், சாகுபடியில் பலத்த நஷ்டம் ஏற்படும் நிலை உள்ளதால் விவசாயிகள் வேதனையடைந்துள்ளனர்.உடுமலை மற்றும் சுற்றுப்பகுதிகளில் தக்காளி சாகுபடி அதிகளவு மேற்கொள்ளப்படுகிறது. வீரிய ரகங்கள் சாகுபடிக்கு பயன்படுத்தப்படுவதால், ஆண்டில் நான்கு சீசன்களில் தக்காளி பயிரிடப்பட்டு, பிற மாவட்டங்களுக்கும், கேரளாவிற்கும் விற்பனைக்கு அனுப்பப்படுகிறது. ஆகஸ்ட் மாதம் துவங்கும் ஆடிப்பட்ட சாகுபடி இந்தாண்டு பருவமழை பெய்யாததால் தாமதமானது. பி.ஏ.பி., இரண்டாம் மண்டல பாசனத்திற்கு தண்ணீர் திறக்கப்பட்டதையடுத்து, கடந்த மாதத்தில், தக்காளி செடி நடவு பணிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆயுதபூஜை விழாவையொட்டி தக்காளிக்கு நல்ல விலை கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பில் விவசாயிகள் இருந்தனர். பருவநிலையும் சாதகமாக இருந்ததால் செடிகளில் அதிகளவில் பூ காணப்பட்டது.

இந்நிலையில், குறிச்சிக்கோட்டை பகுதியில் பயிரிடப்பட்டிருந்த தக்காளி செடிகளில் ஒரு வித மர்ம நோய் பரவ துவங்கியது. செடிகளின் இலைகள் சுருண்டு, சில நாட்களில் உதிர்ந்தது. பின் தண்டு பகுதியின் நிறம் மாறி மண்ணில் சாய்ந்தது. இலைகள் உதிர்ந்ததால், பூக்களும் முதற்கட்ட காய்களும் போதிய சத்து இல்லாமல் கீழே விழத்துவங்கின. இதனால், அதிர்ச்சியடைந்த விவசாயிகள் நோய்தாக்குதலை கட்டுப்படுத்த தனியாரை அணுகி பல்வேறு மருந்துகளை வாங்கி தெளித்துள்ளனர். ஆனால், நோய் கட்டுப்படாமல் அருகிலுள்ள விளைநிலங்களுக்கும் பரவியது. இரண்டு மாதங்கள் வரை பராமரிக்க பல ஆயிரம் ரூபாய் செலவிட்டுள்ள நிலையில், காய்ப்பு பருவத்தில் செடிகள் கருகியதால் விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படும் நிலை உள்ளது. ஒரு ஏக்கரில் பயிரிடப்பட்டுள்ள 12 ஆயிரம் நாற்றுகளில் 40 சதவீத செடிகள் இந்நோய்தாக்குதலுக்கு ஆளாகி கருகியுள்ளது. இதனால், விளைச்சல் பல மடங்கு குறைந்துள்ளது. மர்மநோயை கட்டுப்படுத்த தேவையான தொழில் நுட்ப ஆலோசனைகளை யாரிடம் தெரிந்து கொள்வது என தெரியாமல் விவசாயிகள் அலைந்து வருகின்றனர்.

**நோய் தடுப்பு ஆலோசனை கூட்டம் தேவை:** இது குறித்து பாதிக்கப்பட்ட குறிச்சிக்கோட்டை விவசாயி அழகர்சாமி கூறுகையில், தக்காளி நாற்று ஒன்று 35 பைசா என்ற வீதத்தில் ஏக்கருக்கு 12 ஆயிரம் நாற்றுகள் வாங்கி பயிரிட்டோம். காய்ப்பு பிடித்து அறுவடை செய்ய வேண்டிய செடியின் 80 வது நாளில் மர்மநோய் வேகமாக பரவி வருகிறது. கடந்த இரண்டு ஆண்டுகளாக இந்த நோய் தாக்குதல் இப்பகுதியில் தொடர்கிறது. இதுவரை ஏக்கருக்கு நடவு, களை எடுத்தல், மருந்தடித்தல் உட்பட பணிகளுக்கு செலவிட்ட 12 ஆயிரம் ரூபாய் நஷ்டம் ஏற்படும் நிலை உள்ளது. சில நாட்களில் இந்த நோய் இப்பகுதியில் பல இடங்களில் பரவியுள்ளது.நோய் தடுப்பு பணிகளுக்கு ஆலோசனை வழங்க வேண்டிய தோட்டக்கலைத்துறை அதிகாரிகள் இப்பகுதியில் இதுவரை எந்த பணிகளையும் மேற்கொள்ளவில்லை. நோய்தாக்குதல் தொடர்ந்து பரவி நூற்றுக்கணக்கான ஏக்கர் பாதிக்கும் முன் நடவடிக்கை எடுக்க வேண்டும். இப்பகுதியில் நோய் தடுப்பு ஆலோசனை கூட்டத்தை தோட்டக்கலைத்துறையினர் உடனடியாக நடத்த வேண்டும் என்றார்.

**ஜிப்சம் இட்டு உழுவதால் கூடுதல் மகசூல் பெறலாம்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 07,2010,00:06 IST

வெம்பக்கோட்டை: வெம்பக்கோட்டை வேளாண்மை உதவி இயக்குனர் ராஜகோபாலின் செய்திக்குறிப்பு: வெம்பக்கோட்டை வட்டாரத்தில் தற்போது உளுந்து, பாசிப்பயறு, தட்டைப்பயறு சாகுபடி செய்யநிலம் தயாரிப்பு பணி நடந்து வருகிறது.நிலத்தில் உழவுப்பணி

மேற்கொள்ளும்போது ஜிப்சம் இட்டு உழுவதால் கூடுதல் மகசூல் பெறலாம். விவசாயிகளுக்கு வழங்கிட போதுமான அளவு ஜிப்சம் தேசியஉணவு பாதுகாப்பு திட்டத்தின் கீழ் வெம்பக்கோட்டை வேளாண்மை விரிவாக்க மையத்தில் இருப்பு உள்ளது. இந்த ஜிப்சம் 50 சதவீதம் மானிய விலையில் வினியோகம் செய்யப்படுகிறது. ஜிப்சம் தேவைப்படும் விவசாயிகள் வெம்பக்கோட்டை விரிவாக்க மையத்தை அணுகி பெற்றுக் கொள்ளலாம் எனத் தெரிவித்துள்ளார்.

**மழையால் வரத்து குறைவு: மல்லிகை கிலோ ரூ.450**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 06,2010,00:28 IST

சின்னமனூர்: தொடர் மழையினால் வரத்து குறைந்து மல்லிகைப் பூவின் விலை கிலோ 450 ரூபாய் ஆக உயர்ந்துள்ளது. விளைச்சல் இருந்தும் தேவை குறைவால் மற்ற பூக்களின் விலை குறைந்துள்ளது. தேனி மாவட்டத்தில் பல்லவராயன்பட்டி, சீலையம்பட்டி, கோட்டூர், மரிக்குண்டு, ஆண்டிபட்டி, சுப்புலாபுரம், சிவலிங்கநாயக்கன்பட்டி, பொம்மிநாயக்கன்பட்டி, அய்யம்பட்டி, அரண்மனைப்புதூர், ஓடைப்பட்டியில் மல்லிகை, செவ்வந்தி, கோழிக்கொண்டை, செண்ட் ஆகிய பூ வகைகள் பயிரிடப்பட்டுள்ளன. பொதுவாக மல்லிகை பூ கார்த்திகை, மார்கழி மாதங்கள் தவிர மற்ற மாதங்களில் கிலோ 150 ரூபாயில் இருந்து 200 ரூபாய் வரை விலை போகும். ஏனெனில் ஒவ்வொரு ஆண்டும் கார்த்திகை, மார்கழி மாதங்களில் பராமரிப்பிற்காக மல்லிகை கொடிகளின் கொடிகளை விவசாயிகள் கட்டி வைத்து பாதுகாப்பர். இதனால் இம்மாதங்களில் மட்டும் மல்லிகையின் வரத்து மிகவும் குறைவாக இருக்கும்.

ஆனால் இம்மாதங்களில் தேவையானது மிகவும் அதிகமாக இருப்பதனால், விலை எப்போதும் இல்லாத அளவிற்கு கிலோ ஆயிரம் ரூபாய் வரையில் விற்பனையாகும். குறிப்பாக முகூர்த்தம்,கோயில் திருவிழாக்கள் அதிகம் நடைபெறாத புரட்டாசி மாதத்தில் மல்லிகையின் விலை கிலோ 150க்குள்ளாகவே இருக்கும். ஆனால் இந்த ஆண்டின் தற்போதைய புரட்டாசி மாதத்தில் மல்லிகையின் விலை கிலோ 450 ரூபாய் வரையில் விற்பனையாகி வருகிறது. சில நாட்களாக மாவட்டம் முழுவதும் தொடர் மழை பெய்து வருவதால், மல்லிகையின் விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளது. மழை நீர் அதிகளவில் பாத்திகளில் தேங்கினால் செடி தளைப்பதில்லை. இதன் காரணமாக தற்போது மல்லிகையின் விளைச்சல் பாதியாக குறைந்துள்ளது. இதனால் மார்க்கெட்டில் இப்பூவின் வரத்து குறைந்துள்ளதால் கிராக்கி ஏற்பட்டு விலை உயர்ந்துள்ளது. மற்ற பூக்களான செவ்வந்தி, கோழிக்கொண்டை, செண்ட் ஆகிய பூ வகைகள் கிலோ 50 ரூபாய் வரையில் விற்பனையாகும். ஆனால் இப்பூக்கள் தற்போது அதிகளவு விளைச்சல் இருந்தும்,

புரட்டாசி மாதத்தில் முகூர்த்தம் திருவிழாக்கள் இல்லாததால் தேவைகள் குறைந்து விலை சரிந்துள்ளது. இப்பூக்கள் தற்போது கிலோ 20 ரூபாய் வரை விற்பனையாகிறது.

**விவசாய உரம் தட்டுப்பாடு**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 06,2010,00:55 IST

முதுகுளத்தூர்: தற்போது மழை சீசன் துவங்கி உள்ளதால் விவசாய பயிர்களும் செழிப்புடன் வளர்ந்து வருகிறது. பயிர்களின் வளர்ச்சிக்கேற்றவாறு உரங்கள், பூச்சி கொல்லி மருந்துகள் முதுகுளத்தூர், கடலாடி, கமுதி ஒன்றிய விவசாய கிட்டங்கியில் பற்றாக்குறையாக உள்ளதால், விவசாய பணிகளை மேற்கொள்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. இதனால் வியாபாரிகள்,தனியார் கடைகளில் அதிக விலை கொடுத்து வாங்குகின்றனர். விவசாய பணிகள் மந்தமாகவும், பயிர்கள் வளர்ச்சியின்றியும் காணப்படுகிறது. விவசாயிகளுக்கு போதுமான உரங்கள், மருந்துகள் அரசு மாநிய விலையிலும் கிடைக்க மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**பசுந்தேயிலை ஏஜன்ட்களுக்கு கிடைக்குமா எலக்ட்ரானிக் தராசு?**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 07,2010,01:13 IST

குன்னூர்: "பசுந்தேயிலை கொள்முதல், விற்பனையில் நிலவும் எடைப் பிரச்னையை சமாளிக்க, பசுந்தேயிலை ஏஜன்ட்கள், தொழிற்சாலைகளுக்கு, எலக்ட்ரானிக் தராசு மற்றும் தொழிலை மேம்படுத்த கடனுதவி வழங்க வேண்டும்' என, நீலகிரி மாவட்ட பசுந்தேயிலை ஏஜன்ட்கள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.மலை மாவட்ட சிறு விவசாயிகள் நலச்சங்கம் மற்றும் பசுந்தேயிலை ஏஜன்ட்கள் சங்கம் சார்பில், குன்னூர் கீதா மண்டபத்தில் கலந்துரையாடல் கூட்டம் நடத்தப்பட்டது. தேயிலை வாரிய செயல் இயக்குனர் அம்பலவாணன் சிறப்பு விருந்தினராக பங்கேற்றார்.
பசுந்தேயிலை ஏஜன்ட்கள் சங்கத் தலைவர் சங்கர் பேசியதாவது:தேயிலை விவசாயிகள், தொழிற்சாலைகளுக்கு இணைப்புப் பாலமாக ஏஜன்ட்கள் செயல்படுகின்றனர்; ஏஜன்ட்கள் இல்லாமல், தொழிற்சாலைகள் செயல்படுவது கடினம்; விவசாயிகளிடம் இருந்து தரமான பசுந்தேயிலையை மட்டுமே ஏஜன்ட்கள் வாங்குகின்றனர்; அதற்கேற்ப, கிலோவுக்கு 8 - 10 ரூபாய் விலை கிடைக்கிறது. விவசாயிகளிடம் இருந்து பசுந்தேயிலை பெற்று தொழிற்சாலைக்கு வழங்கும் போது, தொழிற்சாலைகள் 10 கிலோவுக்கு ஒரு கிலோ வீதம் கழிவு செய்கின்றனர்;

இதனால், நஷ்டம் ஏற்படுகிறது. எடைப் பிரச்னையை சமாளிக்க, ஏஜன்ட்கள் மற்றும் தொழிற்சாலைகளுக்கு, மானிய விலையில் எலக்ட்ரானிக் தராசுகளை வழங்க தேயிலை வாரியம் முன்வர வேண்டும்.பசுந்தேயிலை கொள்முதல் மையம் அமைக்க, குறைந்தது 50 ஆயிரம் ரூபாய் முதலீடு தேவைப்படுகிறது; தவிர, விவசாயிகளுக்கு முன்பணம் வழங்க வேண்டியுள்ளது. விவசாயிகள், தொழிற்சாலைகளுக்கு வழங்குவது போன்று, ஏஜன்ட்களுக்கும் தேயிலை வாரியம் மானியம் வழங்க வேண்டும்; தொழிலை மேம்படுத்த, குறைந்தது 50 ஆயிரம் ரூபாய் வங்கிக் கடன் வழங்க வேண்டும். குன்னூர் சுற்றுவட்டாரப் பகுதிகளில் உள்ள தொழிற்சாலைகள், தங்கள் விருப்பம் போல் பசுந்தேயிலைக்கு விலை நிர்ணயிக்கின்றன; தொழிற்சாலைகள் வழங்கும் விலைப்பட்டியலை தொழிற்சாலைகள் முன் பிரசுரிக்கவும், பத்திரிக்கைகள் மூலம் வெளியிடவும் ஏற்பாடு செய்யப்படும் என்ற தேயிலை வாரியத்தின் அறிவிப்பை நடைமுறைப்படுத்த வேண்டும்.

தேயிலை ஏஜன்ட்கள், பல இடங்களில் உள்ள விவசாயிகளின் தோட்டங்களில் இருந்து பசுந்தேயிலையை சேகரித்து, தொழிற்சாலைகளுக்கு வழங்குகின்றனர்; தொழிற்சாலைகள் சார்பில், லாரி வாடகையாக கிலோவுக்கு ஒரு ரூபாய் வழங்க வேண்டும்.இவ்வாறு, சங்கர் பேசினார்.பசுந்தேயிலை ஏஜன்ட்கள் சங்க செயலாளர் சிவாஜி பேசுகையில், ""தேயிலை வாரியத்தின் முயற்சியால், தேயிலை தொழில், செழிப்பான பாதையில் செல்கிறது; பசுந்தேயிலைக்கும் நல்ல விலை கிடைக்கிறது. தொழிற்சாலை உரிமையாளர்கள், பசுந்தேயிலை ஏஜன்ட்களை நண்பர்களாக கருத வேண்டும்; பல தொழிற்சாலைகள், ஏஜன்ட்கள் வழங்கும் பசுந்தேயிலையை வாங்க மறுக்கின்றன; அவ்வாறு மறுக்கும் தொழிற்சாலைகள் முன் போராட்டம் நடத்துவோம். மூடப்பட்ட தொழிற்சாலைகளை மீண்டும் திறக்க, தேயிலை வாரியம் நடவடிக்கை எடுக்க வேண்டும்," என்றார்.

**இன்ட்கோ செயல்பாடில் அதிருப்தி** : பசுந்தேயிலை ஏஜன்ட்கள் சங்கத் தலைவர் சங்கர், செயலாளர் சிவாஜி கூறுகையில், ""பல இன்ட்கோ தொழிற்சாலைகள் தரமற்ற பசுந்தேயிலை வாங்கி, தேயிலைத் தூளை உற்பத்தி செய்கின்றன," என்றனர். மலை மாவட்ட தேயிலை விவசாயிகள் சங்கத் தலைவர் போஜன் பேசுகையில், ""சில இன்ட்கோ தொழிற்சாலைகளால் தான், தேயிலைத் தூளின் தரம் கெடுகிறது; இன்ட்கோ தொழிற்சாலைகள் மீது தேயிலை வாரியம் நடவடிக்கை எடுக்க வேண்டும்," என்றார். தேயிலை வாரிய செயல் இயக்குனர் அம்பலவாணன், ""இன்ட்கோ சர்வ் நிறுவனத்தில் உள்ள குறைகளை நிவர்த்தி செய்ய, இன்ட்கோ அதிகாரிகளுடன் ஆலோசிக்கப்பட்டு வருகிறது," என்றார்.

அரசுப் பண்ணைகளில் நாற்றுகள் விவசாயிகள் பயன்பெற அழைப்பு

பதிவு செய்த நாள் : அக்டோபர் 07,2010,01:14 IST

ஊட்டி: தோட்டக்கலைத் துறையின் கீழ் செயல்படும் அரசுப் பண்ணைகள், பூங்காக்களில், விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ள நாற்றுகள், விதைகளை பெற்று பயனடைய அழைப்பு விடப்பட்டுள்ளது.
நீலகிரி மாவட்ட தோட்டக்கலை இணை இயக்குனர் தேவராஜ் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:பருவமழை காலத்தில், விவசாயிகள் நடவுப் பணிகளை மேற்கொள்கின்றனர். இதற்காக, அரசு தோட்டக்கலைத் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படும் அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில், விவசாயிகளுக்கு தேவையான நாற்றுகள் விற்பனைக்கு தயாராக வைக்கப்பட்டுள்ளன.கல்லாறு தோட்டக்கலைப் பண்ணை: தரமான மிளகு, சில்வர் ஓக், பாக்கு, காபி, பலா, குரோட்டன்ஸ், மலேயன் ஆப்பிள், ஜாதிக்காய், லிச்சி நாற்றுகள்.பர்லியார் பண்ணை: கிராம்பு, ஜாதிக்காய், ரோஸ் ஆப்பிள், பாக்கு, மணிபிளாண்ட், குரோட்டன்ஸ், சில்வர் ஓக், காபி, துரியன், லவங்கப் பட்டை நாற்றுகள்.காட்டேரி பண்ணை: ரோஸ்மேரி, ரோஜா மொட்டு செடிகள், அழகு தாவரங்கள், எலுமிச்சை நாற்றுகள், சில்வர் ஓக், மரக்கன்றுகள்.குன்னூர் பழவியல் நிலையம்: பிளம், பேரி, ஆப்பிள், மாதுளம் பழ நாற்றுக்கள்.குன்னூர் சிம்ஸ்பூங்கா: மரக்கன்றுகள், சாம்பிராணி, போடோகார்பஸ் போன்ற மரக்கன்றுகள், அழகு தாவரங்கள், மலர் விதைகள்.அரசு தாவரவியல் பூங்கா: ரோஜா செடிகள், அழகு தாவரங்கள், கேக்டஸ் ரகங்கள், மலர் விதைகள்.ரோஜாப் பூங்கா: ரோஜா கன்றுகள், சாம்பிராணி மரக்கன்றுகள், மருத்துவச் செடிகள்.தொட்டபெட்டா பண்ணை: தேயிலை நாற்றுகள்.தும்மனட்டி பண்ணை: தரமான அர்கா கோமல் பீன்ஸ் விதைகள்.நஞ்சநாடு பண்ணை: உருளைக்கிழங்கு விதைகள்.கோல்கிரேன் பண்ணை: உருளைக்கிழங்கு, தேயிலை நாற்றுகள்.

தேவாலா பண்ணை: சில்வர் ஓக் நாற்றுகள், காபி, பாக்கு, தேயிலை மற்றும் மிளகு நாற்றுகள்.குன்னூர் பழம் பதனிடும் நிலையம், அரசு தாவரவியல் பூங்கா, சிம்ஸ் பூங்கா, கல்லாறு, பர்லியார், சேரிங்கிராஸ் தோட்டக்கலை வணிக வளாகம் மற்றும் ரோஜா பூங்காக்களில், குன்னூரில் உற்பத்தி செய்யப்பட்ட ஜாம், ஜெல்லி, பழரசம், ஊறுகாய் விற்பனை செய்யப்படுகின்றன. பொதுமக்கள், விவசாயிகள் வாங்கி பயன் பெற வேண்டும். இவ்வாறு, தேவராஜ் கூறியுள்ளார்.

**காய்கறிகளுக்கு விரைவில்குறைந்த பட்ச விலை நிர்ணயம்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 07,2010,01:41 IST

அம்பாசமுத்திரம்:மத்திய அரசு விரைவில் காய்கறிகளுக்கு குறைந்த பட்ச விலையை நிர்ணயம் செய்ய உள்ளதாக நெல்லை எம்.பி., ராமசுப்பு பேசினார்.அம்பாசமுத்திரம் புனித ஜோசப் தொடக்கப் பள்ளியில் எம்.பி., தொகுதி வளர்ச்சி நிதியிலிருந்து 5.25 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கூடுதல் கட்டட திறப்பு விழா நேற்று நடந்தது.
அம்பாசமுத்திரம் நகராட்சி தலைவர் பிரபாகரப்பாண்டியன் தலைமை வகித்தார். துணை தலைவர் அந்தோணிசாமி முன்னிலை வகித்தார். தலைமையாசிரியை அந்தோணி மேரி வரவேற்றார். வளன்கரை மனைகள் தாளாளர் ஸ்டெல்லா மேரி குத்துவிளக்கேற்றினார். மணிமுத்தாறு டவுன் பஞ். தலைவர் முருகன் சுப்பிரமணியன், அம்பாசமுத்திரம் பங்கு தந்தை ஜோசப் ஜான்சன், நகர வியாபாரிகள் சங்க தலைவர் மார்ட்டின், பாண்டிச்சேரி மாநில இளைஞர் காங். பொறுப்பாளர் அமீர்கான் பேசினர்.

நெல்லை எம்.பி., ராமசுப்பு கூடுதல் கட்டடத்தை திறந்து, காங்கிரஸ் மூத்த உறுப்பினர் சடையப்பபிள்ளைக்கு நிதியுதவி வழங்கி பேசுகையில், ""கல்வியின் மூலம் தான் ஏற்றத்தாழ்வுகள் குறையும். நாடு முன்னேற்றம் அடையும். காய்கறிகளுக்கு குறைந்தபட்ச விலை நிர்ணயம், மணிமுத்தாறு பூங்காவை 23 கோடி ரூபாயில் சீரமைப்பது போன்றவைகள் மத்திய அரசின் பரிசீலனையில் உள்ளது. இவைகள் விரைவில் நிறைவேறும்.

திருவனந்தபுரம் மலைப்பாதை திட்டம் குறித்தும் பேசியுள்ளேன்" என்றார்.அம்பாசமுத்திரம் நகராட்சி நிர்வாக அதிகாரி அண்ணாமலை, கவுன்சிலர்கள் அலெக்ஸாண்டர், பிரேம்குமார், ஆரோக்கியமேரி, முருகேசன், சிவசுப்பிரமணியன், இசக்கியம்மாள், மணிமுத்தாறு டவுன் பஞ். துணை தலைவர் வள்ளிகண்ணு, நகர திமுக இளைஞர் அணி அமைப்பாளர் காஜாமுகைதீன், வட்டார காங்கிரஸ் தலைவர் ஜீவானந்தம், சோனியா பேரவை மாநில செயலாளர் பாண்டியன், கல்லிடைக்குறிச்சி நகர தலைவர் லெஷ்மன் யாதவ், வி.கே.புரம் நகர தலைவர் வின்சென்ட், மாநில பிரதிநிதி அசோக், காங்கிரசார் தங்கமணி, கணேசன், வேம்புராஜா, ராமசுந்தரம், வேலப்பன், புனித ஜோசப் உயர்நிலைப் பள்ளி தலைமையாசிரியை குழந்தை தெரஸ், முகைதீன் பாத்திமா நடுநிலைப் பள்ளி தாளாளர் ஆறுமுகம், தலைமையாசிரியை இந்திரா உட்பட பலர் கலந்து கொண்டனர்.ஆசிரியை விக்டோரியா நன்றி கூறினார்.

**கால்நடை வளர்ப்பு சிறப்பு பயிற்சி**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 06,2010,02:27 IST

சங்கரன்கோவில் : சங்கரன்கோவிலில் கால்நடை வளர்ப்பு குறித்து விவசாயிகள் பயிற்சி நடந்தது.சங்கரன்கோவில் ஒன்றிய வேளாண்மைத்துறை சார்பில் கரிவலம்வந்தநல்லூர் கால்நடை மருத்துவமனையில் கால்நடை வளர்ப்பு குறித்து விவசாயிகள் பயிற்சி நடந்தது. வேளாண்மை உதவி இயக்குனர் முகம்மது காசிம் வரவேற்றார். மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் துரைப்பாண்டியன் கால்நடை வளர்ப்பின் முக்கியத்தும் மற்றும் புல் வளர்ப்பு பற்றி பேசினார். கால்நடை உதவி இயக்கனர் சங்கரசுப்பிரமணியன் இப்பகுதிக்கு ஏற்ற ரகங்கள் பற்றி பேசினார். கால்நடை உதவி மருத்துவர்கள் செல்வராஜ், முருகன் ஆகியோர் கலந்து கொண்டு பேசினர்.ஏற்பாடுகளை துணை வேளாண்மை அலுவலர் காளிமுத்து, உதவி வேளாண்மை அலுவலர்கள் குமரேசன், சுரேஷ்குமார் செய்திருந்தனர்.

***நடப்பு வேளாண் பருவத்தில் உரங்களுக்கான தேவை 13 சதவீதம் அதிகரிக்கும்***

*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*

*மும்பை*

*நடப்பு 2010–11–ஆம் வேளாண் பருவத்தில், உர வகைகளுக்கான தேவை 13 சதவீதம் அதிகரித்து ஆறு கோடி டன்னாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.*

*நாட்டின் பல மாநிலங்களில் மழை பொழிவு அதிகரித்துள்ளது. இதனால், வேளாண் சாகுபடி பரப்பளவும், உற்பத்தியும் அதிகரிக்கும் என இஃப்கோ அமைப்பு தெரிவித்துள்ளது.*

*நாட்டின் மொத்த உர தேவையில், 33 சதவீதம் இறக்குமதி செய்யப்படுகிறது. இதில், பொட்டாஷ் மற்றும் பாஸ்பேட் போன்ற உரங்கள் அதிக அளவில் இறக்குமதி செய்யப்படுகின்றன.*

*நாட்டில் உள்ள பல முக்கிய அணைகளில் 75 சதவீதம் நீர் நிரம்பி உள்ளது. இதனால், கரீஃப் பருவத்திலும், ரபி பருவத்திலும் வேளாண் உற்பத்தி அதிகரிக்கும் என்ற நிலைப்பாடு உள்ளது.*

இதுபோன்ற காரணங்களால், உரத்திற்கான தேவை அதிகரிக்கும் என ராஷ்ட்டிரிய கெமிக்கல்ஸ் – பெர்டிலைசர்ஸ் நிறுவனத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குனர் ஜே.கோகரீஸ்வரன் தெரிவித்தார்.

கரீஃப் பருவத்தில் தானியங்கள் உற்பத்தி 10 சதவீதம் உயர்ந்திருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதேபோன்று, எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி 17.3 சதவீத அளவிற்கும், பருத்தி உற்பத்தி 10 சதவீதமும், கரும்பு உற்பத்தி 17 சதவீத அளவிற்கும் உயர்ந்திருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

## காபி ஏற்றுமதி 76% அதிகரிப்பு

நடப்பு நிதி ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் (ஏப்ரல் – செப்டம்பர்) நாட்டின் காபி ஏற்றுமதி, 76 சதவீதம் அதிகரித்து 1.57 லட்சம் டன்னாக உயர்ந்துள்ளது. டாலர் மதிப்பு அடிப்படையில் இது 74 சதவீதம் உயர்ந்து 19.10 கோடி டாலரிலிருந்து 33.40 கோடி டாலராக உயர்ந்துள்ளது.

அன்னியச் செலாவணி

ரூபாய் மதிப்பு அடிப்படையில் காபி ஏற்றுமதி 65 சதவீதம் மட்டுமே உயர்ந்து ரூ.1,570.47 கோடியாக அதிகரித்துள்ளது.

இந்திய காபிக்கு வெளிநாடுகளில் தேவைப்பாடு அதிகரித்து வருகிறது. நாட்டில் காபி உற்பத்தியும் அதிகரித்து வருகிறது. இதுபோன்ற காரணங்களால், நடப்பு நிதி ஆண்டில் காபி ஏற்றுமதி அளவின் அடிப்படையில் 2.80 லட்சம் டன்னாக உயரும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இது, சென்ற நிதி ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஏற்றுமதியைக் காட்டிலும் 37 சதவீதம் (2.04 லட்சம் டன்) அதிகமாக இருக்கும். ஏற்றுமதி அதிகரிப்பதால் நாட்டின் அன்னியச் செலாவணி கையிருப்பு அதிகரிக்கும். வர்த்தக பற்றாக்குறையையும் கட்டுக்குள் வைக்க முடியும்.

உற்பத்தி

சென்ற 2009–10–ஆம் ஆண்டு பருவத்தில் (அக்டோபர் – செப்டம்பர்) காபி உற்பத்தி 2.89 லட்சம் டன்னாக இருந்தது. இது, நடப்பு 2010–11–ஆம் ஆண்டு பருவத்தில் 3.08 லட்சம் டன்னாக உயரும் என காபி வாரியம் முன்னறிவிப்பு செய்துள்ளது. இவற்றுள், அராபிகா காபி உற்பத்தி 94,600 டன்னிலிருந்து 99,500 டன்னாகவும், ரோபஸ்டா காபி உற்பத்தி 1.95 லட்சம் டன்னிலிருந்து 2.08 லட்சம் டன்னாகவும் உயரும் என கணிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் மொத்த காபி உற்பத்தியில் கர்நாடக மாநிலத்தின் பங்களிப்பு 70 சதவீதமாக உள்ளது. இம்மாநிலத்தில், நடப்பு பருவத்தில் காபி உற்பத்தி 7 சதவீதம் அதிகரித்து 2.19 லட்சம் டன்னாக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.